# திருக்கோட்டியூர் நம்பி
# வாழி திருநாமம்

மன்னிய சீர் ஆளவந்தார் மலர்ப் பதத்தோன் வாழியே
வைகாசி ரோகிணி நாள் வந்துதித்தோன் வாழியே
இன்னிள வஞ்சிக்கு இனிதுரைத்தான் வாழியே
எம்பெருமானார் எனும் பேர் இயம்புமவன் வாழியே
தென்னணியாம் காசிப கோத்திரத்துதித்தோன் வாழியே
திருக்குருகைப் பிரான் எனும் பேர் திகழ வந்தோன் வாழியே
முன்னவரும் பெரும்பூதூர் முனிக்கு உரைத்தோன் வாழியே
மொழிந்த திருக்கோட்டி நம்பி மூதுலகில் வாழியே

காசிபன் தன் கோத்திரத்தைக் கருதி வந்தோன் வாழியே
கலை அனைத்தால் முன்னவர்க்குக் கதி அளித்தோன் வாழியே
மாசற மெய்ப்பொருள் எதிக்கு வழங்குமவன் வாழியே
வையக முன் தரிசனத்தால் வாழும் என்றான் வாழியே
ஏசறவே உகந்து எதியை எடுத்தணைத்தான் வாழியே
எம்பெருமானார் எனும் பேர் இயம்புமவன் வாழியே
தேசு புகழ்ச் செல்வன் மொழி தேர்ந்துரைப்போன் வாழியே
திருக்கோட்டியூர் நம்பி சகதலத்தில் வாழியே

ஈரேழு மூன்றொன்றில் இதம் உரைத்தான் வாழியே
ஏற்றமாம் ஆளவந்தார் இணை அடியோன் வாழியே
ஈரெழுவருக்கும் பரமபதம் ஈயுமவன் வாழியே
எம்பெருமானார் எனும் பேர் இயம்புமவன் வாழியே
நாலேழில் நாலா நாள் நாடி வந்தான் வாழியே
நம் மதுரகவி நிலையை நண்ணினான் வாழியே
நாலேழு நாலெழுத்தை நன்குரைத்தான் வாழியே
நங்கள் திருக்கோட்டி நம்பி நற்பதங்கள் வாழியே

அல்பகலும் ஆளவந்தார் அடி நினைவோன் வாழியே
அனவரதம் தெற்காழ்வார்க்கு ஆட்செய்வோன் வாழியே
வெல்பொருள் வெளியிட எதியை வெறுத்துகந்தான் வாழியே
மேதினியோர் உய்வர் என்று மெச்சினான் வாழியே
உள்மந்திரம் எதிராசர்க்கு ஒளித்துரைத்தான் வாழியே
உந்து மத களிற்றநுபவத்து எதியை உகந்தணைத்தான் வாழியே
செல்வ நம்பி குலம் தழைக்கச் செகத்துதித்தான் வாழியே
திருக்கோட்டியூர் நம்பி சகதலத்தில் வாழியே

சீராரும் திருமுடியும் திருமுகமும் வாழியே
சிறந்த கஞ்சம் போன்ற இரு நயனம் வாழியே
தாராரும் தாடம் புயக்கை சங்காழி வாழியே
தனி மருங்கின் பட்டாடை தனி மருங்கும் வாழியே
பேராரும் பெரும்பூதூர் எம்பெருமானார்க்கு அன்பனாய்ப்
பெரிய சரமச் சுலோகம் பேறளித்தான் வாழியே
ஏராரும் ஆளவந்தார் இணை அடிகள் மறவாத
எங்கள் திருகோட்டி நம்பி இணை அடிகள் வாழியே

---